Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 336

வெள்ளிக்கிழமை
28 ஒக்ரோபர் 2022

ஐப்பசி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

கொற்றாவத்தையில்

## இளைஞரொருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொற்றாவத்தைப் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்று இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் 11 ➤

2023 ஆம் ஆண்டுக்கான

## வரவு - செலவு மீதான 2 ஆம் வாசிப்பு நவ. 14

கொழும்பு, ஒக். 28
2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் இரண்டாவது மதிப்பீட்டுக்காக நவம்பர் 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 11 ➤

## இலங்கை அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பாதீர்!

ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடம் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 28
இலங்கை அரசு வாக்குறுதிகளை அள்ளி வீசும். ஆனால், நிறைவேற்றாது. அதுதான் இலங்கை அரசின் கடந்தகாலச் சரித்திரம். எனவே, வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துவிடாதீர்கள் - இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் எடுத்துரைத்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. 11 ➤

## கடலட்டைப் பண்ணைகளுக்கு ஒரு வாரத்தில் நடவடிக்கை

நீரியல்வள ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 28
கிராஞ்சி மக்களின் போராட்டத்தின் எதிரொலியாக, அடுத்த ஒரு வாரத்துக்குள் சட்டவிரோதக் கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. 11 ➤

## பல்கலை மாணவர்கள் ஹெரோய்னுடன் கைது

யாழ்ப்பாணம், ஒக். 27
கொழும்பு பல்கலைக் கழகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் மூவர் உயிர்கொல்லிப்போதைப் பொருளான 11 ➤

பொருளாதாரச் சிதில நிலை

# நலிவடைந்தவர்களுக்காக நாடாளுமன்றில் விவாதம்!

நவம்பர் 8 முழுநாளும்

கொழும்பு, ஒக்ரோபர் 28
நாட்டில் ஏற்பட்டுள்ள வரலாறுகாணாத பொருளாதார நெருக்கடியால், வாழ்வாதாரத் துன்பங்களை மிக அதிகமாக எதிர்கொள்ளும் மிகவும் நலிந்த மக்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நவம்பர் மாதம் 8ஆம் திகதியன்று முழுநாள் விவாதம் நடத்தப்படவுள்ளது. 11 ➤

பருத்தித்துறையில்

## 33 பவுண் நகை நேற்றுத் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக். 28
பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோலியில் 33 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. நேற்றுப் பகல் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. 11 ➤

சிறுவன் மீது வாள்வெட்டு

## வன்முறைக்குழு நபர் நேற்றுக் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக். 28
17 வயதுச் சிறுவன் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திய குற்றச்சாட்டில், சமூக விரோதச் செயல்களின் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த நபரொருவர் 11 ➤

தனிமையில் வசித்த

## பெண்ணிடம் கொள்ளை; சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக். 28
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தனிமையில் வசித்துவந்த 55 வயதுப் பெண்ணை சித்திரவதைசெய்து அவரிடம் இருந்து தங்க நகைகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- 11 ➤

## பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடையவர் கைது!

ஹெரோய்னுக்கு அடிமையானவர் என்று பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். 11 ➤

## மாணவி மீது வன்புணர்வு; மைத்துனர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், ஒக். 28
தனது மனைவியின் சகோதரியான (மைத்துனியான) மாணவி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மன்னாரில் இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
மன்னார் - தாராபுரம் கிராமத்தில் பாடசாலை மாணவியொருவர் கடந்த வாரம் காணாமல் 11 ➤

## படையினரிடம் சரணடைந்தோர் காணாமல் ஆக்கப்படவில்லையாம்!

காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28
2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரின்போது இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்படவில்லை. இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டமைக்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த. அத்துடன் இறுதிப்போரின் போது தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர் என்ற விடயத்தையும் அவர் மறுத்துள்ளார். 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இடைவிலகலால் சமூகப் பிறழ்வுகள் அதிகரிக்கும்

## உளவியல் மருத்துவர்கள் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக். 28**

**பாடசாலை இடைவிலகலால் உடனடி மற்றும் நீண்ட கால நோக்கில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும். சமூகப்பிறழ்வு உள்ளிட்ட விடயங்கள் உடனடியாக நடக்கும். நீண்ட கால நோக்கில் எமது சமூகத்தின் கல்வியறிவு வீதம் குறைவடைந்து செல்லும் என்று யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

வடக்கு மாகாணத்தில் கொரோனா பெருந்தொற்றின் பின்னரான காலப்பகுதியில் பாடசாலை இடைவிலகல் பல மடங்காக சடுதியாக அதிகரித்துள்ளது. இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் மருத்துவ நிபுணர்களிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தனர்.

சமூகப்பிறழ்வுகள் அதிகரிக்கும். இளவயது கர்ப்பம் கூடுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. குற்றச்செயல்கள் அதிகரிக்கும். நீண்டகால நோக்கில் கல்வியறிவு குறைந்த சமூகம் உருவாகும். இதனால் வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கும்.

குறுகிய கால நோக்கில் பாடசாலையிலிருந்து இடைவிலகியவர்கள் தொழில்களுக்குச் சென்றாலும், நீண்ட காலம் அவர்களால் அதில் நிலைத்திருக்க முடியாது. அத்துடன், அவர்களால் உயர்நிலைக்குச் செல்ல முடியாது. இது நீண்ட கால நோக்கில் பாதிப்பை ஏற்படுத்தும்.

கைத்தொலைபேசிக்கு அடிமையானதால் இடைவிலகுபவர்களும் இருக்கின்றார்கள். இவர்கள் இணைய விளையாட்டுக்கு அடிமையாவதால் நாளடைவில் அதிலேயே மூழ்கி இடைவிலகுகின்றனர். பாடசாலையிலிருந்து இடைவிலகியவர்கள், வேறு வழி தெரியாது கைத்தொலைபேசிக்கு அடிமையாகும் சந்தர்ப்பங்களும் உண்டு.

இவ்வாறு விலகுபவர்கள் குழுவாக வன்முறையில் ஈடுபடுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகம். இது குறுகிய மற்றும் நீண்ட கால நோக்கில் சமூகத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும், பாடசாலை இடைவிலகல்களால் பெற்றோருக்கும் பெரிய பிரச்சினைகள் ஏற்படும். பெற்றோருக்கு இடையிலும் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

பாடசாலை இடைவிலகல்கள் எப்போதும் ஆரோக்கியமானவை அல்ல. ஆரம்பத்திலேயே அதனை தணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ஒ-5)

# வடக்கில் போதைப்பாவனை பின்னணியில் ஆயுதப்படைகளே!

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 28

வடக்கு மாகாணத்தில் தமிழ் இளைஞர்களை தமது இனம் பற்றியோ தேசம் பற்றியோ சிந்திக்கவிடாது தடுக்கும் நோக்கில் திட்டமிட்டு உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையை ஆயுதப் படைகளே ஊக்குவிக்கின்றன. போதைப்பொருள் பாவனையில் இருந்து எமது எதிர்கால சந்ததியினரை மீட்க வேண்டிய பொறுப்பு வெறுமனே அரசியல்வாதிகளிடம் மட்டும் சுமத்தமுடியாது. இது அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும் - இவ்வாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நூல் வெளியீட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை இளையோர் மத்தியில் பூதாகரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இளையோர் தமது இனம் பற்றியோ தேசம் பற்றியோ சிந்திக்கவிடாது தடுக்கும் நோக்கிலேயே திட்டமிட்டு போதைப்பொருள் பாவனை ஊக்குவிக்கப்படுகிறது.

சட்டவிரோத செயல்கள், வன்முறைச் சம்பவங்கள், விபத்துக்கள் நாள்தோறும் தலைதூக்கியுள்ளன. இதற்கு பிரதான காரணம் இளையோர் மத்தியில் ஏற்பட்டுள்ள போதைப்பொருள் பாவனை அதிகரிப்பே.

அரசாங்கம் தமக்கெதிரான எதிர்ப்பு சக்திகளை அடக்க போதைப்பொருளை கொண்டுவர ஆயுதப்படைகளை ஊக்குவிப்பவர்களாகப் பயன்படுத்துகின்றது. நாட்டிலுள்ள படைகளில் ஏறத்தாழ 70 சதவீதமானவர்கள் வடக்கு- கிழக்கு மாகாணங்களிலேயே குவிக்கப்பட்டிருக்கின்றனர். பெருந்தொகையான கஞ்சா இங்கு கடத்தப்படுகின்றது. தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கவும் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்கவும் முடிந்த ஆயுதப்படைகளுக்கு போதைபொருளை தடுக்கும் வல்லமை இல்லையா?

இந்தச் சதி முயற்சியிலிருந்து எமது எதிர்கால சந்ததியினரை மீட்க வேண்டிய பொறுப்பு வெறுமனே அரசியல்வாதிகளிடம் மட்டும் சுமத்தமுடியாது. இதனை கட்டுப்படுத்த அனைத்துத் தரப்பினரும் இணைந்து கூட்டுப் பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும். ஒவ்வொரு தமிழனும் சிந்தித்து இளம் சமூகத்தினரை அழிவில் இருந்து மீட்க வேண்டும் - என்றார். (ச)



# உடைமையில் ஹெரோய்ன் கோப்பாயில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 28

கோப்பாய், செல்வபுரம் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து தலா 25 மில்லிகிராம், 60 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது.

கைதாகியவர்களில் ஒருவர் ஏற்கனவே உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் இருவரையும் மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-26)

# கடமைக்கு இடையூறு: இளைஞர் கைதானார்

மதுபோதையில் போக்குவரத்துப் பொலிஸாருக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

அதேபகுதியைச் சேர்ந்த 30 வயதான இளைஞர் போக்குவரத்து பொலிஸாரிடம் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)



# 'போதைக்கெதிரான பாதை' விழிப்புணர்வுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 28

அனைத்துலக தமிழர் மேம்பாட்டு நிதியத்தின் அனுசரணையுடன் 'யன்' அமைப்பு இணைந்து நடத்தும் 'போதைக்கெதிரான பாதை' எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வு போட்டிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகின.

முதற்கட்டமாக மாணவர்களிடையே சித்திரப்போட்டி, சுலோகம் எழுதுதல் போன்ற போட்டிகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் அதிகளவான மாணவர்கள் கலந்துகொண்டு சமூக நலவிழிப்புணர்வை தமது ஆக்கங்களில் வெளிப்படுத்தினர்.

நிகழ்வில் மாணவர்களுக்கு போதைப்பொருள் பாவனை மற்றும் அவற்றை இல்லாதொழிக்கும் வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வு கருத்துரைகளும் ஆசிரியர்களால் வழங்கப்பட்டன. (ச-27)

# வாராந்தம் 20 பேர் போதைக்கு சிகிச்சை

## யாழ். மாவட்டச் செயலர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாராந்தம் உயிர்கொல்லி போதைக்கு அடிமையான சுமார் 20 பேர் வரையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இந்த தரவு மிகவும் மோசமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. இதனால் இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாராந்தம் 20 பேர் வரையில் உயிர்கொல்லி போதைக்கு அடிமையாகிய நிலையில் சிகிச்சை பெறுவருகின்றனர்.

வெளிமாவட்டத்திலிருந்து உயிர்கொல்லி போதைப்பொருள் இங்கே கொண்டுவரப்படுகின்றதா? இல்லையெனில் கடல் மார்க்கமாக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படுகிறதா என கண்டறியப்படவேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்காக நாமும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுத்து வருகின்றோம். அதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதன்மூலமே உயிர்கொல்லி போதையெனும் அரக்கனை இல்லாதொழிக்க முடியும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய காலத்துக்குள் உள்ளூராட்சி தேர்தல்

### அமைச்சர் ஜானக வக்கும்புர உறுதி



**கொழும்பு, ஒக். 28**

**உரிய காலத்துக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறும். தேர்தல்களை பிற்போடுவதற்கு இடையூறு விளைவிக்கும் பழக்கம் எமது கட்சிக்குக் கிடையாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.**

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் புத்தளம் ஆனமடுக தொகுதிக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் முன்கூட்டியே தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தல்களைப் பிற்போடும் பழக்கம் எமது கட்சிக்கு கிடையாது. எந்தநேரத்தில் வேண்டுமானாலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து தேர்தல் முறைமையை மாற்றுமாறு ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். அதன்படி உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறைமையில் குழப்பநிலை காணப்படுகிறது.

அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புடன் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவந்து உரிய காலத்துக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் - என்றார். (ச-44)

# மக்களுக்கு எதிராக செயற்படவில்லை!

### கப்ரால் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.28

நாடு வங்குரோத்து அடையாமல் இருப்பதற்கு நான் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தேன். மக்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் செய்தது கிடையாது என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கடும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்கள் பாதிக்கின்றனர். இப்படியான தொரு நிலைமை ஏற்பட நீங்களும் காரணம் எனக் கூறப்படுகின்றது. மக்கள் தவிக்கையில் உங்களால் நிம்மதியாக நித்திரை கொள்ள முடிகின்றதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் கப்ரால் தெரிவித்துள்ளதாவது:

நான் நிம்மதியாகவே உறங்குகின்றேன். ஏனெனில் மக்களுக்கு எவ்வித தீங்கும் இழைக்கவில்லை. நாடு வங்குரோத்து அடையாமல் இருப்பதற்கு நானே நடவடிக்கை மேற்கொண்டிருந்தேன். எனது மனச்சாட்சி தூய்மையானது. ஆக எந்தவொரு குற்ற உணர்வும் இல்லை.

தனிநபர்களால் குற்றச்சாட்டுகளை முன்வைக்கலாம். வழக்குகளை தொடுக்கலாம். அவ்வாறான வழக்குகளையே எதிர்கொண்டுவருகின்றேன். தனிநபர் என்பது ஒட்டுமொத்த மக்களை பிரதிபலிக்காது. மக்கள் என் தொடர்பில் தவறான கருத்துகளை வெளியிடுவதில்லை - என்றார். (எ-44)

### அத்துமீறி மீன்பிடி;

# 7 தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 28

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 7 பேர் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு அருகே ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர், அந்தப் பகுதியில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகையும் தமிழக மீனவர்கள் 7 பேரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மயிலிட்டியிலுள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,26)

# ஆதன மதிப்பீட்டு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 28

வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் ஆதனங்கள் மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி மாகாண பிரதம செயலாளர் செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது.

முதற்கட்டமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 8 உள்ளூராட்சி மன்றங்களில் ஆதனவரி மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி நகரசபை, காரைநகர் பிரதேசசபை, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, கரைச்சி பிரதேசசபை, முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை, கரைதுறைப்பற்று பிரதேசசபை, மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேசசபை ஆகியவற்றில் ஆதனவரி மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது.

கலந்துரையாடலில் அந்தந்த மாவட்டங்களின் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களையும், மேற்கூறப்பட்ட 8 உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார். (ஒ-14-9)

# தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பியோருக்கு நடமாடும்சேவை

யாழ்ப்பாணம், ஒக். 28

தமிழகத்திலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

நடமாடும் சேவையில் பிறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளல், பிரஜாவுரிமை சான்றிதழ் பெற்றுக் கொள்ளல், இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களுக்கான காணித் தேவை மற்றும் காணி உரிமை பிரச்சினைகள், வன்முறையால் பாதிக்கப்பட்ட சொத்து மற்றும் உயிரிழப்பு காயத்துக்கான நட்டஈடு பெற்றுக் கொள்ளல், தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளல், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினூடாக ஏற்கனவே அனுப்பப்பட்ட கோவைகளை பூரணப்படுத்தல் தொடர்பான சேவைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், நடமாடும் சேவையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், இழப்பீட்டுக்கான அலுவலகம், காணி ஆணையாளர் நாயக திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் நாயக திணைக்களம் ஆகிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

மேலும் நடமாடும் சேவை தொடர்பாகத் தேவையான விடயங்களை தங்கள் பிரதேச செயலகங்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்.மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார். (ஒ-14,20)

# நீதிமன்றில் முன்னிலையாகுமாறு ரி.ஐ.டி. பணிப்பாளருக்கு உத்தரவு!

கொழும்பு, ஒக்.28

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 90 நாள்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மாணவர் செயற்பாட்டாளர்கள் வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகிய இருவர் பற்றிய உண்மைகளை தெரிவிக்காத காரணத்தால், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று தங்காலை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கும் மேலாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் காவலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு கைதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்த சமர்ப்பணங்களை அடுத்தே நீதவான் ஹேமந்த புஸ்பகுமார இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தங்காலையில் உள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு கைதிகள் சார்பாக இதுவரை நீதிமன்றத்துக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிக்கையிடவில்லை என்று சட்டத்தரணி போபகே தெரிவித்தார்.

ஆரம்பத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதிகளை தங்காலைக்கு அழைத்துச் சென்ற போதும், பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் நாரஹேன்பிட்டியில் உள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவு தலைமை அலுவலகத்தில் உள்ள தடுப்பு மையத்தில், கடந்த ஒரு மாத காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று நீதிமன்றத்தில் தெரிய வந்துள்ளது.

முதலிகே தற்போது குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் மருந்து வழங்கப்படாமல் கடுமையான சொறி நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும், சிறிதம்ம தேரர் செவ்வாய்க்கிழமை அதிக காய்ச்சலால் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும், பின்னர் அவர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பென்பது ஒரு சுவாசிப்பு!

எஸ்.சுப்பிரமணியம் சிவனேசராசன்
ஆசிரியர்
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி



புத்தகங்களே சிறந்த ஆசிரியர்கள். உலகின் ஆகச் சிறந்த வழிகாட்டிகளும், தோழர்களும் புத்தகங்கள்தான் என்றவாறான முதுமொழிகள் காலத்தால் அழியாதவை. வாசிப்பின் முக்கியத்துவத்தையும் மகத்துவத்தையும்தான் இந்தப் புத்தகங்கள் பறைசாற்றுகின்றன.

ஆனால், இன்றைய நவீன உலகில் நாம் வாசிப்புப் பழக்கத்தில் இருந்து விலகாதிருக்கின்றோமா? அதைச் சரிவரக் கடைப்பிடிக்கின்றோமா? என்று கேட்டால், இல்லை என்பதுதான் பதில்.

முன்பு கிராமங்கள் ஒவ்வொன்றிலும் சிறிய நூலகங்கள் போன்று இயங்கிய வாசகர்சாலைகள் காணப்பட்டன. நாளடைவில் இவை வாசிக சாலைகள் என்று அழைக்கப்பட்டு இன்று சனசமூக நிலையங்களாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இன்றைய சனசமூக நிலையங்கள் பலவற்றில் நூலக வசதிகள் இல்லாமல் இருப்பதும் எமது சமூகத்தில் வாசிக்கும் பழக்கம் குறைகின்றமைக்கு பிரதான காரணம் ஆகும்.

அதாவது கிராமங்களில் உள்ள சனசமூக நிலையங்களுடன் இணைந்ததாக சிறிய நூலகங்களும் இயங்குவது காலத்தின் அவசிய தேவையாகும்.

வாசிப்பதை அன்றாட பழக்கமாகக் கொள்ளும் மாணவர்களே கிரகித்தல் திறன், நுண்ணறிவு, பொதுஅறிவு போன்ற தனித்துவ ஆற்றல்மிக்கவர்களாக பரீட்சைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வர்.

ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் கதைப் புத்தகங்கள், நாவல்கள் போன்றவற்றை வாசிப்பதன் மூலமே எமது மண்ணின் உண்மையான வரலாற்றை நாம் அறியமுடியும். உதாரணமாக இன்றைய கொரோனா தொற்றுநோய் போன்று எழுபதுகளில் மனித உயிர்களைப் பலியெடுத்த கொலரா எனப்படும் வாந்திபேதி தொற்றுநோயானது பொதுமக்களின் பேராதரவுடன் அன்று எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டது என்பதை சமூக மருத்துவத் துறை பேராசிரியரும் எழுத்தாளருமான நந்தியின் 'தங்கைச்சியம்மா' நாவல் சிறப்பாக விளக்குகின்றது. இதேபோன்று இன்று எமது மண்ணில் அழிந்து கொண்டிருக்கும் பூலோகத்துக் கற்பகதரு என்று புகழப்படும் பனை மரத்தை எமது முன்னோர்கள் உயிருக்கு நிகராக பாதுகாத்தார்கள் என்பதை எழுத்தாளர் செங்கைஆழியானின் 'முற்றத்து ஒற்றைப் பனை' நாவல் நகைச்சுவையாக விவரிக்கிறது.

ஆகவே, எமது சமூகத்தில் புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் மேம்படுத்தப்பட்டு எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பது எம் ஒவ்வொருவரினதும் கடமை ஆகும்.

# இலங்கையின் கடன்மறுசீரமைப்பு தாமதப்படுத்தும் சீனா

இலங்கை அரசாங்கத்தின் தவறான கொள்கைகள் மற்றும் ஊழல் மோசடிகள் காரணமாக ஒட்டுமொத்த நாடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது.


இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு வெறுமையாகிவிட்ட நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 70.2 சதவீதத்தை தொட்டு விட்டது. இதனால் உள்நாட்டில், அத்தியாவசியப்பொருள்கள் உள்ளிட்ட அனைத் துவகைப் பொருள்களின் விலைகளும் உச்சத்தைத் தொட்டுள்ளன.

இலங்கையின் நெருக்கடிகளை தவிர்க்கும் முகமாகவும், பொதுமக்களின் பட்டினி வாழ்க்கையை தடுக்கும் முகமாகவும் இந்தியா உடனடியாக அத்தியாவசிய உதவிகளை வழங்கியதோடு 4 பில்லியன் டொலர் கடன்களை எந்த நிபந்தனைகளும் இன்றி வழங்கியுள்ளது. இதனால், இலங்கை ஓரளவுக்கு நிம்மதிப்பெருமூச்சுவிடக்கூடியதாக இருக்கின்றது. அது மட்டுமன்றி இந்தியா, சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுக்களின்போது பிரசன்னமாகி இலங்கைக்கான சாட்சியாளராகவும் செயற்பட்டு வருகின்றது.

இதேவேளை, இம்முறை நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரக் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப் பட்டதோடு அதற்கான நடவடிக்கைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

இதன்மூலம் இலங்கை கடன் பொறிக்குள் சிக்குண்ட நாடாகவும், கடனிலிருந்து வெளிவர முடியாத நாடாகவும், சர்வதேச ஆதரவு தேவை என்ற விடயமும் வெளிப்பட்டுள்ளது. இலங்கைக்கு கடன் கொடுத்த நாடுகளில் பிரதான நாடாக சீனா விளங்குகின்றது.

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களை மறுசீரமைக்கும் கோரிக்கைக்கு பல நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. குறிப்பாக, அமெரிக்கா, உள்ளிட்ட மேற்குலக நாடுகளும், இந்தியாவும், ஜப்பானும் திறந்த மனதுடன் கடன்மறுசீரமைப்புச் செயற்பாட்டுக்கு உதவுவதற்கு தயாராக உள்ளதாக பகிரங்கமாகவே அறிவித்துள்ளன. ஆனால், சீனா தனது பகிரங்க அறிவிப்பைச் செய்வதற்குத் தயாராக இல்லை. இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதாக இருந்தால் முதலில் கடன் மறுசீரமைப்பைச் செய்ய வேண்டியுள்ளது.



கடன் மறுசீரமைப்பு என்பது கடன் கொடுக்கப்பட வேண்டிய காலம், அதற்கான வட்டி, திருப்பிச் செலுத்த வேண்டிய தொகைகள் ஆகியவற்றில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும் என்பதாகும்.

இதுவொரு சாத்தியமான செயற்பாடாகும். இந்தச் சாத்தியமான செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் பச்சைக்கொடியை காண்பித்துள்ளதோடு ஆரம்பகட்டப் பேச்சுக்களையும் மேற்கொண்டுள்ளன.

ஆனால், சீனாவைப் பொறுத்தவரையில் இந்த விடயத்தில் வெளிப்படைத் தன்மையை பின்பற்றுவதற்குத் தயாரில்லாத நிலையில் தான் உள்ளது. ஏனென்றால், சீனா இலங்கையின் நெருக்கடியானநிலைமைகளை உணர்ந்து அதனைப்பயன்படுத்தி தனது 'கடன்பொறி' இராஜதந்திரத்தினை நடை முறைப்படுத்தவே முயல்கின்றது. இலங்கையின் நெருங்கிய நண்பன் என்று கூறிக்கொள்ளும் சீனா, தான் வழங்கிய கடன்களை எவ்வாறு மீளப்பெறலாம் என்பது பற்றியே அதிகளவில் கரிசனை கொண்டுள்ளது. அது மட்டுமன்றி, அந்தக் கடன்களை மீளப் பெறு வதற்காக புதிய வட்டி வீதத்தில் மேலதிகமாக புதிய கடன்களை வழங்குவதற்கும் திட்டமிட்டுள்ளது.

இதனால் தான் இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி ஏறத்தாழ ஒன்பது மாதங்கள் நிறைவுக்கு வந்துவிட்ட நிலையில் இன்னமும் சீனா எந்த விதமான நிதி நன்கொடைகளையும் வழங்காது அமைதியாக இருந்து வருகின்றது. மாறாக, சீனாவின் உரத்தை நிராகரித்தமைக்காக இலங்கையின் நெருக்கடிகளையும் நன்கு அறிந்திருந்தும் 6.9 மில்லியன்களை இழப்பீடாக பெற்றுக் கொண்டிருக்கின்றது. இது எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்ற மனோநிலையாகும்.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணயநிதியம், பாரீஸ்கிளப் உள்ளிட்டவையும் சீனாவின் அறிவிப்பையே எதிர்பார்த்துள்ளன. ஏனென்றால், இந்தத் தரப்புக்கள் தாம் இலங்கையின் நெருக்கடிக்காக வழங்கும் உதவி நிதியை சீனா தனது கடன்களுக்காகப் பெற்றுக்கொண்டுவிடும் என்ற அச்சத்தைக் கொண்டிருக்கின்றன. இதுவொரு இயல்பான அச்சம் தான்.

இவ்வாறான நிலையில்தான் தற்போது கடன்மறுசீரமைப்பு தொடர்பிலான பேச்சுக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற வகையிலும், நிதி இராஜாங்க அமைச்சர் ஷேஹான் சேரசிங்கவும் முன்னெடுத்த வண்ணமுள்ளனர். இருப்பினும், இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடும், பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீளுவதற்கான சந்தர்ப்பங்களும் சீனாவின் கைகளுக்குள் சென்றுவிட்டன. சீனாவின் தீர்க்கமான முடிவு அறிவிக்கப்படாமையால் தான் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்த உச்சிமாநாட்டுக்கு இணைத்தலைமை வகிப்பது குறித்து இலங்கையுடன் எந்த இணக்கப்பாட்டையும் எட்டாத நிலையில் ஜப்பான் உள்ளது.

நன்றி : இணையம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிய அரசமைப்பெனும் ஆடுகளமும் இந்தியாவும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஒரு வருடத்துக்குள் புதிய அரசமைப்பை உருவாக்குவேன் என்றும் அதன் ஊடாக இனப் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவேன் என்றும் கூறியிருக்கிறார். இந்தக் கருத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் வர வேற்றுள்ளார். வாக்குறுதியாக இல்லாமல் அது செயல் வடிவம் பெறவேண்டும் என்று சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். நல்லாட்சி அரசின் காலத்தில் புதிய அரசமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக் கான தீர்வை எட்ட முடியும் என்று இந்த நாட்டில் முழுமையாக நம்பிய நபராக இரா.சம்பந்தன்தான் இருப்பார். அத்தகைய அதீத நம்பிக்கையால் எதிர்க்கட்சியாக இருந்து அரசாங்கத்தை பாதுகாக் கவும் செய்தார். கண்மூடித்தனமாக அரசாங்கத்தை குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தமையால் தமிழ் மக்கள் மத்தியில் கூட் டமைப்பு பெரும் பின்னடைவைச் சந்தித்தது. 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் அது எதிரொலித்திருந்தாலும், அதன் பின்னரும் சம்பந்தன் தனது போக்கை மாற்றிக் கொள்ளாமல் புதிய அரசமைப்பு உருவாகும் என்று குருட்டுத்தனமாக நம்பினார்.

பௌத்த – சிங்கள பேரினவாதம் தனது வழமையான – பரவணிப் பண்பியல்பையே கடைசியில் காட்டியது. சம்பந்தனின் நம்பிக்கை யில் மண் அள்ளிப்போட்டது.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் இனப்பிரச் சினைத் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடனான ஊடாட்டத்தை கூட்டமைப்பு இரண்டு தடவைகள் முன்னெடுத்தது. மஹிந்த ராஜ பக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 2011 ஆம் ஆண்டு 18 சுற்றுப் பேச்சுக்களுடன் அது முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. மஹிந்த நினைத்திருந்தால், தமிழர்களுக்கான தீர்வைத் தந்திருக்க முடியும். ஏனெனில் போர் வெற்றிநாயகர்களாக ராஜபக்ச குடும்பம் சிங்கள மக்களால் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், சமஷ்டித் தீர்வை மஹிந்த தமிழர்களுக்கு கொடுத்திருந்தால், எவரும் அதனை எதிர்த்திருக்கமாட்டார்கள். ஆனால், மஹிந்தவுக்கு அப்ப டியெல்லாம் தமிழர்களுக்கு தீர்வைக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் துளியும் கிடையாது. அதனாலேயே அவர் தலைமையி லான அரசாங்கம் கூட்டமைப்புடனான பேச்சை இழுத்தடித்து, பின்னர் முற்றாக அந்தப் பேச்சை ஒருதலைப்பட்சமாக முடிவுக்கும் கொண்டு வந்திருந்தது. இதன் பின்னர் நல்லாட்சி அரசின் காலத் தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு உருவாக்கமும் தோல்வியில் முடிந்தது. இந்த நிலையில், மூன்றாம் தரப்பின் மத்தி யஸ்தத்தோடு பேச்சுக்கு சென்றிருந்தால், இப்படியான நிலை வந் திருக்காது என்ற கருத்துகள் எழுந்திருந்தன. மூன்றாம் தரப்பு என் றால், அது இந்தியாவா, அமெரிக்காவா என்ற கேள்விகளும் கூடவே எழும். என்னதான் அமெரிக்கா உலகம் முழுதையும் தன் கட்டுப் பாட்டில் வைத்திருக்க நினைத்தாலும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவைத் தாண்டி அமெரிக்கா எதுவும் பிடுங் கிவிட முடியாத நிலையே உள்ளது. எனவே அமெரிக்காவை விட வும் இலங்கைப் பிரச்சினையில் மூக்கை நுழைக்கக்கூடிய மூன்றா வது சக்தியாக இந்தியாவைச் சுட்டமுடியும். 1987ஆம் ஆண்டு இந்திய– இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதன் ஊடாக இந்த நாட்டின் அரசியல் விவகாரங்களில் அதுவும் ஈழத் தமிழர் அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவைத் தாண்டி ஒன்றும் செய்ய முடியாத புவியியற் சூழலே காணப்படுகின்றது.

இப்போது மீண்டும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை ரணில் கையில் எடுத்திருக்கின்றார். இதுவரை ஆட்சிக்கு வந்த எந்தவொரு பௌத்த – சிங்கள அரசாங்கங்களும், தமிழ் மக்களுக் கான தீர்வு விடயத்தில் மனசுத்தியுடன் நடந்து கொண்டதில்லை. பெரும்பான்மை பௌத்த–சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதை மாத்திரமே தமது தலையாய கடமையாகக் கொண்டிருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு விதிவிலக்கானவர் அல்லர். கடந்த காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து முன்னெடுத்த புதிய அரசமைப்பு முயற்சி தோல்வியில் முடிவடைந்திருந்தது. இப்போது தொடங்கும் முயற்சியையும் முரட்டுத்தனமாக நம்புவது புத்திசாலித்தனம் அல்ல. எனவே சமயோசிதமான நடவடிக்கையில் உடனடியாகத் தமிழினம் இறங்கவேண்டிய நேரம் வந்திருக்கிறது. புதிய அரசமைப்பில், இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படவுள்ளதாகச் சொல்லப்படும் பின்னணியில், இந்த முயற்சிக்குள் இந்தியாவையும் எப்படியாவது கோர்த்துவிடுவதே தமிழர் தரப்பு எடுக்கக்கூடிய தந்திரோபாய நகர்வாக இருக்கமுடியும். 13 ஆம் திருத்தத்தையும் தாண்டியதாக அந்தத் தீர்வை உள்ளடக்கு மாறு இந்தியா, இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமானால், இப் போதிருக்கும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளால் நிச்சயமாக அதனை ரணில் அரசாங்கம் கேட்டு நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். மாறாக மூன்றாம் தரப்பின் கண்காணிப்பின்றி, ரணில் அர சாங்கம் மட்டுமே புதிய அரசியலமைப்பை உருவாக்குமானால் அதில் முன்வைக்கப்படும் தீர்வு நிச்சயமாக ஓரவஞ்சனைத்தனத் தோடுதான் இருக்கும். எனவே இப்போது இலங்கையின் புதிய அரசியலமைப்பு என்ற ஆடுகளத்துக்குள் இந்தியா நுழைவதே தமிழர்களுக்கும், இந்தியாவுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

நாளொரு நல்வார்த்தை

"எதற்கும் தயாராக இருப்பவனைத்தான் வாய்ப்புகள் தேடி வரும்"

- போவீ



இலஞ்ச ஊழல் வழக்கு

# அரசியல்வாதிகளுக்கு அல்ல அரச அதிகாரிகளுக்கு மட்டுமே

## விமல் தரப்பு இப்படியொரு வாதம்

**கொழும்பு, ஒக்.28**

**இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மீது விசாரணைகளை மேற்கொள்ள முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ சார்பில் கொழும்பு மேல் நீதிமன்றில் முதல் கட்டமாக ஆட்சேபனை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.**

சட்டவிரோதமான முறையில் 75 மில்லியனுக்கும் அதிக மான சொத்துக்களை சம்பா தித்தார் என்று தெரிவித்து இலஞ்ச ஊழல் ஆணைக்கு ழுவால் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ வுக்கு எதிராக வழக்குத் தாக் கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழு சட்டத்தின் கீழ் அரச அதிகாரிகளுக்கு மாத்திரமே இவ்வாறான குற்றச்சாட்டுக் களை முன்வைக்கமுடியும் என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ சார்பில் முன்னிலையான சட்டத்த ரணி தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்கோ நாடா ளுமன்ற உறுப்பினர்க ளுக்கோ இவ்வாறான குற் றச்சாட்டுக்களை முன் வைக்க முடியாது என சட்டத் தரணி மேலும் தெரிவித்துள் ளார். சட்டத்தரணிகளின் கருத்துக்களை ஆராய்ந்த நீதிமன்றம் வழக்கை எதிர்வ ரும் 28 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

(எ-இ)

# சுமந்திரனின் உரையை விசாரிக்க நாடாளுமன்றக் குழு

கொழும்பு, ஒக்.28

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் குறித்த உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு தொடர் பாக நாடாளுமன்றத்தில் எம்.ஏ.சுமந்திரன் ஆற்றிய உரையை விசாரிக்க நாடா ளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்கவேண்டும் என்று நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு சீர் திருத்த அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ச சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்த்த னவிடம் கோரியுள்ளார்.

நாடாளுமன்ற சுமந்திரனின் அறிக்கையின் உள்ளடக் கத்தை ஆராய்ந்து பொருத் தமான நடவடிக்கையை பரிந்துரைக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

அமைச்சர் சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில், அரச மைப்பு திருத்தம் தொடர் பான உயர்நீதிமன்ற வியாக் கியானத்தை சுமந்திரன் விமர்சித்தார் என்றும், அது பொருத்தமற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(எ-இ)

நாளை 29.10.2022 சனிக்கிழமை ஐப்பசி 12

சுபநேரம் : 03.03 - 04.33

ராகுகாலம்: 09.03 - 10.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டக்ளஸை கொல்ல முயன்றோருக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறை

கொழும்பு, ஒக்.28

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது களுத்துறை சிறைச் சாலையில் தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவர்க ளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 15 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 22 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

குற்றவாளிகள் இருவருக்கும் அபராதம் விதித்த மேல் நீதி மன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, பிரதிவாதிகள் இருவரும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி அல்லது அண்மித்த காலப்பகுதியில் களுத்துறை சிறைச்சாலையில் டக்ளஸ் தேவானந்தாவை கொல்ல முயற்சித்தார் என்று சட் டமா அதிபர் பிரதிவாதிகள் மீது குற்றஞ்சாட்டினார்.

டக்ளஸ் தேவானந்தாவின் மண்டையோட்டை உடைத்து பலத்த காயத்தை ஏற்படுத்தி, கொலை செய்ய முயன்றனர் என்று அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு அழைக் கப்பட்ட போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் முன் னிலையாகியிருந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். ஸ்கந்தராஜா மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த நிர்மலன் ரொஹான் ஆகியோர் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர்.

இது ஒரு பாரதூரமான செயலாகும் எனக் குறிப்பிட்ட நீதிபதி, குற்றம்சாட்டப்பட்ட இருவரும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இழப்பீடு வழங்க உத்தரவிட்டார். (எ-இ)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது

சாவகச்சேரி, ஒக். 28

தென்மராட்சி கிழக்கு பாலாவிப் பகுதி சமுர்த்திப் பயனாளிக ளுக்கு கடந்த 3 மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிவாரணக் கொடுப்பனவு நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டது.

கொடிகாமம் சமுர்த்தி வங்கியில் கடந்த மூன்று மாதங்களாக கொடுப்பனவு வழங்கப்படாததால் மக்கள் பெரும் பொரு ளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தனர்.

உரிய கொடுப்பனவுக்குரிய கட்டு நிதி சமுர்த்தி வங்கிக்குக் கிடைத்த போதிலும் இன்னும் வரவில்லை என முகாமையா ளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அந்தப்பகுதி பொதுமக்கள் தெரிவித்த முறைப்பாடு, உதயன் பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

அதனையறிந்த சமுர்த்தி உயர் அதிகாரிகள், கொடிகா மம் வங்கிக்கு விரைந்து கொடுப்பனவு வழங்காமலிருந் ததற்கான காரணம் தொடர்பில் வினவினர். அதன்போது கடனைக் காரணம் காட்டி கொடுப்பனவு வழங்குவது நிறுத்தக்கூடாது என்றும் சமுர்த்திப் பயனாளிகளுக்கான கொடுப்பனவை உடனே வழங்குமாறும் பணித்துள்ளனர். அதனையடுத்து கொடுப்பனவு நேற்றுமுன்தினம் வழங்கப் பட்டது என்று மக்கள் தெரிவித்தனர். (ஒ-14-9)

# கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 28

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2022 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதுக்கு விண் ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய கலைக்கு விசேட சேவையாற்றி 60 வய தைப் பூர்த்தி செய்த நல்லூர் பிரதேசசெயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் கலைஞர்கள், விருதுக்கான தங்களது சுயவிவரக்கோவையுடன் கலைசார்பாக தங்களிடமுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேசசெயலக கலாசாரப் பிரிவில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள் ளது. (ஒ-14)


## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை

## பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் 2023

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி :- 10.11.2022 வியாழக்கிழமை பி.ப 12.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 10.11.2022 வியாழக்கிழமை பி.ப 02.00 மணிவரை

கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 10.11.2022 வியாழக்கிழமை பி.ப 2.30 மணி

| இல | குத்தகைவிபரம் | மாதவாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 56,100.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல – 06 | 1,500.00 | 55,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல – 07 | 1,500.00 | 24,350.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 1,000.00 | 11,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | …… | 121,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 809,710.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 110,550.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,750.00 | 585,600.00 | 10,000.00 | 1,000.00 |
| 09 | இறால்மடம் சந்தை | ….. | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 10 | இறால்மடம் சந்தை கோழிக்கடை | 1,250.00 | 27,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 11 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 571,648.00 | 10,000.00 | 1,000.00 |
| 12 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 1,750.00 | 692,120.00 | 10,000.00 | 1,000.00 |
| 13 | கும்பலைச்சந்தை | …… | 331,150.00 | 5,000.00 | 1,000.00 |
| | **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை | …….. | 55,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தைகோழிக் கடை | 1,050.00 | 77,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | கூத்தன்சீமாச் சந்தைகருவாட்டுக்கடை | 1,050.00 | 16,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | கணேஸ்வரம் சந்தை | ……… | 44,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | கணேஸ்வரம் சந்தைகோழிக் கடை | 1,000.00 | 55,100.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | கீரிமலை மரக்கறிச்சந்தை | ……… | 26,796.00 | 1,000.00 | 1,000.00 |
| | **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை | ……… | 441,265.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 698,611.00 | 10,000.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 539,880.00 | 5,000.00 | 1,000.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 20,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 14,537.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | குரும்பசிட்டி சந்தை | ……… | 11,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 07 | குரும்பசிட்டி கோழிக்கடை | 1,000.00 | 40,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 173,800.00 | 1,000.00 | 1,000.00 |
| | **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | ……… | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 77,660.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,200.00 | 67,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 1,200.00 | 60,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 1,200.00 | 53,300.00 | 1,000.00 | 1,000.00 |

**குறிப்பு :**

- மாதவாடகை யாவும் விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடாத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடிதஉறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒருபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி, காங்கேசன்துறை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பபடிவங்களை மேற்படி உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படிசந்தை, கூத்தன்சீமா சந்தை, கும்பலைச் சந்தை, வீமன்காமம் சந்தை காங்கேசன்துறை சந்தைகளிலிருந்து 1 KM தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறி, கோழிஇறைச்சி கடலுணவு விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
- சந்தையை குத்தகைக்கு எடுப்பவரால் சந்தையில் மேற்கொள்ளப்படும் அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை- காங்கேசன்துறை**
**28.10.2022**

(ச.37131) (2x 6)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாகபூசணி திருமண சேவை

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

0771387596,0719999306



கொக்குவில்

கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோவில் பரிபாலனசபை

## விசேட பொதுக்கூட்டம்

ஆலய விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 05.11.2022 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

முக்கிய விடயம் :- நிர்வாக சபைக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளை நிவர்த்தி செய்தல்.

செயலாளர்
ந.ஸ்ரீறஞ்சன்


# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு தென்மராட்சியில் 63 பேர் தெரிவு

சாவகச்சேரி, ஒக். 28

**வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு தென்மராட்சி பிரதேசத்திலிருந்து 63 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.**

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஏற்பாட்டில், வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருந்த தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு கடந்த 16,17,18 ஆம் திகதிகளில் முதலாம் கட்ட நேர்முகத் தேர்வு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்டது. நேர்முகத்தேர்வில் 100க்கு மேற்பட்டோர் பங்குபற்றிய வேளையில், தேவையான ஆவணங்களை வைத்திருந்த பிரதேசத்தைச் சேர்ந்த 63 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட 63 பேரையும் வெளிநாடுகளுக்கு முகவர் மூலம் அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அவர்களது பயணம் தொடர்பான செயலமர்வு நேற்று வியாழக்கிழமை பிரதேசசெயலக மண்டபத்தில் இடம்பெற்றது. (ஒ-14-9)


## வலிகாமம் வடக்கு பிரதேசசபை – காங்கேசன்துறை கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2022

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடையினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :-28.10.2022 தொடக்கம் 18.11.2022 .பிற்பகல் 12.30 மணிவரை**

**கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி:- 18.11.2022 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணிவரை**

**கேள்விப் பத்திரம்திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 18.11.2022 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.30 மணிவரை**

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 18.11.2022 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

01. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
02. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
03. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
04. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ/ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. இவ் வியாபாரநிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேசசபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.
06. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கைதுணை அல்லது அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவர்.
07. கடை கட்டடத்தில் புனரமைப்புவேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
08. சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும்.
09. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம்/ தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
10. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேசசபைக்கு செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப்பணம் எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.
11. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
12. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்தபொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன், கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
13. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் தண்டப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
14. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/ தகவல்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 0212241130 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் மீளளிக்க முடியாதது | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் | | | | |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல. 6 | 162.5 | 600,000.00 | 2,500.00 | 1,000.00 | 60,000.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல. 7 | 162.5 | 600,000.00 | 2,500.00 | 1,000.00 | 60,000.00 |

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை.** 28.10.2022


# அட்டை பண்ணையை ஆதரித்தால் கூட்டங்களுக்கு அழைப்பா?

## கடற்றொழில் அமைச்சின் மீது கேள்விக்கணைகளை முன்வைக்கிறார் ஆலம்

மன்னார், ஒக். 28

கடற்றொழில் அமைச்சால் ஏற்பாடு செய்யப்படுகின்ற மீனவர்களின் அபிவிருத்தி தொடர்பான முக்கியமான முடிவுகள் எடுக்கும் கலந்துரையாடல்களுக்கு மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்களின் சமாசம் மற்றும் சங்கங்களுக்கு அழைப்புக்கள் விடுப்பதில்லை என்று மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்களின் சமாச செயலாளர் முகமட் ஆலம் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மீனவர்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக எரிபொருள் பெற்றுக் கொள்வதில் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறார்கள். ஒரு நாளைக்கு தொழிலுக்குச் செல்வதாயின் 30 தொடக்கம் 60 லீற்றர் வரையான மண்ணெண்ணெய் தேவைப்படும். ஆனால் தற்போது மூன்று நாள்களுக்கு ஒரு முறை 15 லீற்றர் மண்ணெண்ணெய் மாத்திரமே வழங்கப்படுகிறது. இதனால் பலர் தொழிலை இழந்துள்ளனர்.

இந்த நிலையில் கடற்றொழில் அமைச்சால் கடற்றொழில் திணைக்களத்தினூடாக ஒழுங்கு செய்யப்படுகின்ற கடற்றொழில் சம்பந்தப்பட்ட அபிவிருத்திக் கூட்டங்களுக்கு மீனவ சங்கங்களின் சமாசத்துக்கோ அல்லது சங்கங்களுக்கோ அழைப்பு விடுப்பதில்லை. அமைச்சின் கீழ் இயங்குகின்ற கிராமிய மீனவர் அமைப்புகளுடன் மாத்திரம் தொடர்புகளைப் பேணி கலந்துரையாடிச் செல்கின்றனர். இவ்வாறான செயற்பாடு மன்னார் மாவட்டத்தில் மட்டுமல்லாது வடமாகாணம் முழுவதும் தொடர்கின்றதா? என்று தெரியவில்லை. மன்னாரில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற மீனவர்களுக்கான எரிபொருள் தொடர்பான கூட்டத்துக்கும் எம்மை அழைக்கவில்லை. அமைச்சரின் அட்டைப்பண்ணை செயற்பாடுகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்களுக்கு அழைப்பு விடுப்பதும், எதிர்த்து கேள்வி கேட்பவர்கள் நிராகரிக்கப்படும் செயற்பாடுகளும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன - என்றார். (ஒ-14-213)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

சாவகச்சேரி, ஒக். 28

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவர்களது பெற்றோருக்கு போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டது.

நிகழ்வில் வளவாளர்களாக தென்மராட்சி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.தர்மேந்திரா, ஆசிரிய ஆலோசகர் செ.ஜெயானந்தன், எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சூ.குணசாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்விஅறிவித்தல்.
## தலைவர் பெறுகைகள் குழு,
## மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி

1. தலைவர் மாவட்ட பொதுவைத்தியசாலையின் பெறுகைக்குழு, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான / பொருட்களுக்கான தற்போது தகமையுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டிகேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. கேள்வியாளர்கள் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்குமேல் பதிவுசெய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர், இடம் பெறாதவரா யிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல. 021 2285329/0212284111 ) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், இம் முகவரியில் அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி யொன்றை மாவட்ட பொதுவைத்தியசாலை,A9 வீதி,கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 28.10.2022ம் திகதி முதல் 10.11.2022ம் திகதிவரை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் 11.11.2022 ம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொதுவைத்தியசாலை, A9வீதி, கிளிநொச்சி** எனும் முகவரியில் **நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக் கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாககேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்வி முன்னாயத்தக்கூட்டம் 02.11.2022 - 2.30 பி.ப

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.)In Million without VAT | Grade | Contract Period | Non Refund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/DGH KOC/2022/ rec/W/03 | Roof renovation of Nurses quarters | 10.90 | C7or C6 | 30 Days | 5,000.00 | 110,000.00 | 31.01.2023 |
| 02 | NP/DGH KOC/2022/ rec/W/04 | Renovation of food court for doctors nurses and staffs | 2.95 | C8or C7 | 30Days | 1,500.00 | 30,000.00 | 31.01.2023 |

**தலைவர்,**
**பிராந்தியபெறுகைக்குழு,**
**மாவட்ட பொதுவைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

(cr.38096) (2.6)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்
## பொதுக்கூட்டம்

- **காலம் : (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி**
- **இடம் : ஸ்ரீ காமாட்சி அம்பாள் திருமண மண்டபம் யாழ்ப்பாணம். (நாச்சிமார்கோயில்)**
- **தலைவர் : திரு.தி.கிருஸ்ணகுமார்**

அங்கத்தவர்களும் விஸ்வகர்மகுல சமூகத்தைச் சேர்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தவறாது கலந்து சமூக வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**அ.இ. விஸ்வகர்மகுல சங்கம்,**
**213 / 1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 236 7494**

**ஜெ.மனோகர்**
**கௌரவ செயலாளர்.**

(cs.21390) (2.6)

## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
## பொதுக்கூட்ட அறிவித்தல்

*மதிற்குரிய உபயகார்களே !*

எமது ஆலய புதிய நிர்வாகசபைத் தெரிவும், பொதுக் கூட்டமும் **எதிர்வரும் (13.11.2022) ஞாயிற்றுக் கிழமை காலை : 10.00 மணிக்கு ஆலய மடத்தில் இடம்பெறும்.** அனைவரும் கலந்துசிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

(cs.47332) (2.6)

**தர்மகர்த்தாக்கள் சபை.**

## Church of South India
### JAFFNA DIOCESE
## முக்கிய அறிவித்தல்

தென்இந்தியத் திருச்சபை யாழ் பேராயத்தின் செயற்குழு இம் மாதம் 08 ஆம் திகதி கூடி ஏகமனதாக தீர்மானித்ததற்கு அமைவாக அருட்பணி.சோ.லிங்கேசுவரன் மற்றும் அருட்பணி.எஸ்தர் மடுராணி பொன்ராசா ஆகியோர் தென் இந்தியத் திருச்சபை யாழ் பேராயத்திலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பாக எதிர்வரும் காலங்களில் எவரேனும் மேற்கொள்ளும் பணிநிலை மற்றும் குருத்துவத் தொடர்பாடல்களுக்கு யாழ் பேராயம் எவ்வகையிலும் பொறுப்பு ஏற்கமாட்டாது. இவர்கள் தம் பணி நிலை நிமித்தம் இதுவரை வசிக்க விடப்பட்ட இடங்களிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் தவறின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**செயலாளர்**
**தென் இந்தியத் திருச்சபை, யாழ் பேராயம்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**05 • 04 • 1940**



**மறைவு**
**24 • 10 • 2022**

## நாகையா மகேஸ்வரி

வேம்போலை, இணுவில் கிழக்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகையா மகேஸ்வரி கடந்த (24.10.2022) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகையா ஆசிரியரின் அன்பு மனைவியும், சாந்தினி, நந்தினி, சுபாசினி, கருணாகரன், தாரணி ஆகியோரின் அன்புத் தாயாரும், முருகானந்தனாதன், செல்வகுமார், பாலதேவன், நிறஞ்சனி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், வைரவநாதன் மற்றும் பரமேஸ்வரி, அம்பிகை, உசாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரவீன், மதூரா, திஷான், திஷனிகா, யவிஸ்ணா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (24.10.2022) திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில் (வேம்போலை, இணுவில் கிழக்கு, இணுவில்) நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை அறியத்தருகின்றோம்.

**தகவல்:**

| | | | |
|---|---|---|---|
| **நந்தினி செல்வகுமார்** | : | **+ 491 789 317958** | **- ஜேர்மனி** |
| **சுபாசினி பாலதேவன்** | : | **+ 491 521 477 0632** | **- ஜேர்மனி** |
| **கருணாகரன்** | : | **077 417 9658** | **- இலங்கை** |

**மகள்கள் மற்றும் மருமக்கள்**

(cs.47320) (2.6)

## மரண அறிவித்தல்

**அன்னை மடியில்**
**20 • பங்குனி • 1930**



**இறைவன் அடியில்**
**23 • ஐப்பசி • 2022**

## திருமதி இரத்தினேஸ்வரி பாலசிங்கம்

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரி பாலசிங்கம் அவர்கள் 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற Dr. சின்னத்துரை பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், அருந்ததி-செல்லத்துரை, பாலேந்திரன், பாலகிருஷ்ணன், பாலேஸ்வரன், துஷ்யந்தி-கேசவநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற Dr.போதலிங்கம், சற்குணேஸ்வரி, கோமதி, Dr.பத்மலிங்கம், ஜெயலட்சுமி, சத்தியவதி, கணேசலிங்கம், நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லத்துரை, Dr.இந்துமதி, விமலினி, Dr. ஆனந்தி, கேசவநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான மார்கிரெட், குருநாதன், Dr. குமாரசாமி, மயில்வாகனம், மற்றும் Dr.ராஜேஸ்வரி, புவனநாதன், Dr. தங்கேஸ்வரி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பகீரதி-ரமேஷ்குமார் , சஞ்சீவன்-குஷிபா, திலீபன், சகன், ஸ்வரன், ஸ்வாதி, சேயோன் ஆகியோரின் செல்லப் பேர்த்தியும், வைஷ்ணவி, வைதேஹி, அர்ஜுனா, நவீனா, சரீனா ஆகியோரின் ஆசை பூட்டியும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

**நிகழ்வுகள்:**

பார்வைக்கு:
திகதி : சனிக்கிழமை, 29 ஐப்பசி 2022 காலை 10:00 மணி முதல் 6:00 மணி வரை
முகவரி : 600 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

**கிரியை:**
திகதி : ஞாயிற்றுக்கிழமை, 30 ஐப்பசி 2022 காலை 08:00 மணி முதல் 10:00 மணி வரை
முகவரி : 600 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

**தகனம்:**
திகதி : ஞாயிற்றுக்கிழமை, 30 ஐப்பசி 2022 காலை 10:00 மணி
முகவரி : அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானம்

**தொடர்புகளுக்கு:**
**அருந்ததி - மகள் Mobile: +94 74 351 2751 (Sri Lanka)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

## சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 28

உள்ளூராட்சி தேர்தல்களை உடனடியாக நடத்த வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் கூட்டாக செயற்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக்கொண்டுள்ளன. நாட்டில் அனைத்து ஜனநாயக நடவடிக்கைகளும் தொய்வின்றி தொடரவேண்டும் என்பதில் எமக்கும் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை மாகாண சபைத் தேர்தல்களுக்கும் கொடுக்க வேண்டும் - இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டே மாகாணசபை முறைமைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் இந்த மாகாண சபைகளை தென்னிலங்கையின் ஆளும் கட்சியினரோ அல்லது எதிர்க்கட்சியினரோ விரும்பவில்லை. இதன் காரணமாகத்தான் அதிகாரப்பகிர்விலோ அல்லது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதிலோ அக்கறையின்றி இருக்கின்றார்கள். இதன் காரணமாகத்தான் மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்த பின்னரும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தும்படி சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து யாரும் குரல்கொடுக்க முன்வரவில்லை.

நாட்டில் ஜனநாயகம் தழைப்பதற்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடாத்தப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் இதே வேகத்தில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும்படி ஏன் இவர்கள் கோரவில்லை? அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்கு முன்னராக நடக்க வேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அரசாங்கம் பிற்போடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் எதிர்க்கட்சிகள், நான்கு வருடங்கள் கடந்தும் மாகாண சபைகளுக்கான தேர்தல் வைக்கப்படாமை குறித்துப் பேசாமல் இருப்பது வருத்தத்திற்குரியது.

வடக்கு- கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில், அதிகாரிகளும் ஆளுநர்களும் தாம் விரும்பியவாறு செயற்படக்கூடிய ஒரு போக்கினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மாகாணத்திற்கான மக்கள் பிரதிநிதிகள் இன்மையால், எமது மாகாண நிலங்களை பல்வேறுபட்ட தரப்புகளும் தாம் விரும்பியவாறு பங்கிட்டுக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மாகாணத்தின் தொன்மையான, புராதனமான இடங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. மாகாண சபையினூடாகச் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் அதிகாரிகளினால் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன.

ஆகவே, வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு மாகாணசபைத் தேர்தல் என்பது அவசியமானது - என்றுள்ளது. (ம)

# வீட்டுக்குள் புகுந்து இருவர் அடாவடி

## ஒருவர் மக்களால் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் பகுதியில் ஆள்களற்ற வீட்டை உடைத்து உள்நுழைந்த ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மூளாய் பிரதான வீதியில் அமைந்துள்ள வீட்டின் உரிமையாளர் கடந்த மாதம் உயிரிழந்த நிலையில் உரிமையாளரின் மகன் வீட்டைப் பராமரித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வீட்டைப் பார்ப்பதற்காக வீட்டின் உரிமையாளரின் மகன் சென்றுள்ளார். அவ்வேளை வீட்டின் கதவு திறந்திருந்துள்ளது.

அதனையடுத்து வீட்டுக்குள் சென்று பார்த்த பொழுது இருவர் உறங்கிய நிலையில் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே ஒருவர் உரிமையாளரின் மகனைக் கண்டவுடன் தப்பித்துச் சென்றுள்ளார். மற்றைய நபர் அயலவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த நபரிடம் முதற்கட்ட விசாரணைகள் மேற்கொண்ட போது, சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த 26 வயதான இளைஞர் எனவும் மற்றைய நபர் மூளாய் வேரம் பகுதியைச்சேர்ந்தவர் எனவும் தெரியவந்தது.

அத்துடன் இருவரும் நேற்றுமுன்தினம் வீட்டுக்குள் புகுந்து கோழி இறைச்சி சமைத்து உண்ட பின் வீட்டிலிருந்த தொலைக்காட்சியைப் பார்வையிட்டனர் எனவும், மது அருந்தினர் எனவும் அதன் பின்னர் வீட்டில் உறங்கினர் எனவும் தெரியவந்தது.

மேலும் கைது செய்யப்பட்ட நபர் உயிர்கொல்லி போதைப் பாவனைக்கு அடிமையாகி பல திருட்டுகளில் ஈடுபட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,125)

# சுகாதாரத்தில் தகுதியில்லாத பொலிஸார் சேவை நிறுத்தம்

## வருகின்றது புதிய திட்டம்

கொழும்பு, ஒக். 28

உடற் தகுதி இல்லாத நிலையில் உள்ள (சுகாதார ரீதியிலான பிரச்சினைகள்) பொலிஸாரின் சேவையை இடைநிறுத்துவது தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டிரான் அலஸ் உத்தரவிட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அதன் தலைவர் அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

உரிய சுகாதார ஆரோக்கிய நிலையில் இல்லாத பலர் பொலிஸ் சேவையில் உள்ளனர் எனவும் அவர்கள் மருத்துவச் சான்றிதழ்களை காண்பித்து சிரமமான கடமைகளில் ஈடுபடுவதில்லை என வருகைதந்த உறுப்பினர்கள் இங்கு தெரிவித்தனர். எனினும், ஒரு சிலருக்கு அவ்வாறான சுகாதார கோளாறுகள் இல்லை என்றும், இதனால் எப்பொழுதும் கடமைகளைச் சரியாக மேற்கொள்ளும் அதிகாரிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய, சுகாதார ரீதியாக தகுதியற்ற சுமார் 4 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் தற்பொழுது பொலிஸ் சேவையில் உள்ளனர் என பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார். இதன்போது ஆலோசனை வழங்கிய அமைச்சர் டிரான் அலஸ், சுகாதார ரீதியாக தகுதியற்ற பொலிஸ் அதிகாரிகளை சேவையிலிருந்து நீக்குவது தொடர்பான பிரேரணையை பொலிஸ் திணைக்களத்தால் தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார். அதற்கமைய எதிர்வரும் காலத்தில் அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

# போக்குவரத்துக்கு இடையூறான வீதியை சரிசெய்த இளைஞர்கள்

சாவகச்சேரி, ஒக். 28

போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்பட்ட சாவகச்சேரி அஞ்சலக வீதியில், தற்போது போக்குவரத்து மேற்கொள்ளக்கூடிய வகையில் மாற்று நடவடிக்கைகளை அந்தப் பகுதி இளைஞர்கள் முன்னெடுத்துள்ளனர்.

சாவகச்சேரி அஞ்சலக வீதி புனரமைப்புக்கென 3 வருடங்களுக்கு முன்னர் ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் முதற்கட்டமாக கனகன்புளியடிச்சந்தி வரை வீதியில் காணப்பட்ட மதகுகள் புனரமைக்கப்பட்டன. அத்துடன் சாவகச்சேரி நகரப் பகுதியில் வெள்ளவடிகாலும் அமைக்கப்பட்டது. புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டதால் கடந்த இரு வருடங்களாக வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் வீதியின் பல இடங்களில் வெள்ளம் தேக்கமடைந்து போக்குவரத்துக்கு பெரும் இடையூறாகக் காணப்பட்டது.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை பெய்த மழையால் வீதியில் பெருமளவு வெள்ளம் காணப்பட்டது. இதனால் வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

அதனையடுத்தே அந்தப்பகுதி இளைஞர்கள் வெள்ளத்தை வெளியேற்றும் விதமாக புதிதாக அமைக்கப்பட்ட வடிகாலில் துவாரமிட்டு வீதியில் தண்ணீர் தேக்கமடையாமல் தண்ணீரை வழிந்தோடச் செய்தனர். அதன்பின்னரே வீதியில் போக்குவரத்து செய்ய முடிந்தது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ-14,9)

# நாடாளுமன்றத்துக்கு ஒப்பான மற்றொரு மக்கள் சபை அமையாது

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28

நாடாளுமன்றத்துக்கு ஒப்பான மற்றுமொரு மக்கள் சபையை அமைப்பதற்குச் சட்டத்தில் இடமில்லை, அவ்வாறு மேற்கொள்ள முயற்சிப்பது நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறுவதாகும் என்று சபை முதல்வர், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்பொழுது சில வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்துக்கு ஒப்பான மற்றுமொரு மக்கள் சபையை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஊடகங்கள் மூலம் அறிக்கையிடப்படுகின்றது. அது அரசமைப்புக்கு முரணானது. விசேடமாக தேர்தல் ஒன்றின் மூலம் பொதுமக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். இதனால், மக்கள் பிரதிநிதிகளை மாற்ற வேண்டுமென்றால் தேர்தல் மூலம் அதனை மேற்கொள்ள வேண்டும். அதனால், இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்வது சட்டரீதியானது அல்ல. அது நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறுவதாகும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் ஒழிப்புக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு

## வலி. மேற்கு சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 28

வடக்கில் போர் நிறைவடைந்த பின்னர் திட்டமிட்ட போதைப் பொருள் பாவனையை ஒழிப்பதற்கு அனைத்து தரப்புடனும் இணைந்து செயற்பட சபை தனது பங்களிப்பை ஆற்றவேண்டும் என வலிகாமம் மேற்கு பிரதேசசபையில் ஏகமனதாக நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் நடனேந்திரன் தலைமையில் சபையின் பிரதான மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது சபையின் உறுப்பினர் பொன்ராசா பிரேரணை ஒன்றை முன்வைத்தார் மாதகல் போன்ற கடற்கரைப் பகுதிகளின் ஊடாகத்தான் போதைப் பொருள் அதிகமாகக் கடத்தப்படுகின்றது என பெரும்பாலும் சுட்டிக் காட்டுகின்றார்கள். யாழ் மாவட்டம் இன்று போதைக்கு அடிமையாகிக் காணப்படுகின்றது.

போர் முடிவடைந்த காலப்பகுதியிலே தொடங்கி திட்டமிட்டு பரப்பப் பட்டஒன்றாகவே இதனை நாங்கள் பார்க்க வேண்டும். அண்மையில்கூட வடமராட்சியில் இரண்டு இளைஞர்கள் இறந்துள்ளார்கள். அவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு உரிய தடயங்கள் கிடைத்துள்ளன. போதைப்பொருள் பாவனை தொடர்பான செயற்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு எம்மிடம் வலுவான கட்டமைப்பு ஒன்று இல்லை.

பொலிஸாரும் கடற்படையினரும் எந்நேரமும் கண்காணித்துக் கொண்டிருக்கின்றனர். 24 மணி நேரமும் கடற்படையினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அப்படியிருக்கையில் போதைப்பொருள் எவ்வாறு கொண்டுவரப்படுகின்றது? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. குறிப்பாக எமது ஆளுகைக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களாக இருக்கக்கூடிய இளவாலை, வட்டுக்கோட்டை, மானிப்பாய் பொலிஸ் நிலையங்கள் போதைப்பொருள் ஒழிப்புக்கு எதிராக கூட்டிணைவுடன் செயற்பட வேண்டும். எமது பிரதேசசபையும் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பில் அனைத்துத் தரப்பினருடனும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்று அந்தப் பிரேரணையில் அவர் வலியுறுத்தினார். இதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததை அடுத்து, அது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (அ-ம-125)

# சமூக விஞ்ஞானப் போட்டியில் தென்மராட்சி வலயம் முன்னணி

யாழ்ப்பாணம், ஒக். 28

மாகாண மட்டத்திலான சமூக விஞ்ஞானப் போட்டியில் தென்மராட்சி வலயம் முன்னிலை பெற்றுள்ளது. மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் 13 வலயங்களில் இருந்து பங்கு பற்றிய மாணவர்களில் 36 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 15 மாணவர்கள் தென்மராட்சி வலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

# சிறுமியுடன் தாம்பத்தியம் இளைஞன் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக். 28

15 வயதேயான சிறுமியுடன் குடும்பமாக வாழ்ந்த 20 வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- கல்வியங்காடு பகுதியைச் சொந்த இடமாகக் கொண்டு, பிரான்ஸில் வசித்து வந்த இளைஞனுக்கும், அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமிக்குமிடையே காதல் ஏற்பட்டுள்ளது. கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்த அந்த இளைஞர் குறித்த சிறுமியுடன் தலைமறைவாகியிருந்தார். இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருந்தது. இந்த விடயம் அச்சுவேலி பொலிஸாரால் காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பிரிவினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட தீவிர தேடுதல் மற்றும் விசாரணைகளின் அடிப்படையிலேயே மேற்படி இளைஞர் கைதுசெய்யப்பட்டார். (அ-ம-27)


**Invitation for Bids (IFB)**

**Maintenance & Service of Intercom Telephone system at Teaching Hospital – Jaffna for Year 2022/2023**

01. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from eligible and experienced and reputed qualified Applicants for Annual Maintenance Services of NEC SVS 8100 IP PABX Intercom at Teaching Hospital, Jaffna, for the year 2022/2023 as described below.

02. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method.

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and bidder shall be registered under Telecommunication Regulatory Commission (TRC) for supply and maintenance of Communication Equipments and possess Business Registration for this purpose.

04. A Complete set of bidding documents in English language may be purchased by interested bidders from the Administrative Office of the Teaching Hospital - Jaffna, on working days between 09:00 am. and 03:00 pm from 2022-Oct-28 to 2022-Nov-10 on submission of a written request to the address below and payment of a non-refundable fee of Rs. 1,500.00 with the certified copy of the following documents.
- A copy of the Business Registration Certificate
- A copy of Telecommunication Regulatory Commission (TRC) license

05. The Intercom System can be inspected on working days between 09:30 am. and 03:00 pm. up to 2022- Nov-10.

06. Sealed bids shall be deposited with duplicate in the tender Box made available at Director, Teaching Hospital Jaffna or sent by registered post addressed to the Director, Teaching Hospital Jaffna at the above address to reach him on or before 03.00 pm on 2022-Nov-10. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders representatives who choose to attend at the above address.

07. All bids must accompanied a bid security issued by a reputable bank in Sri Lanka amounting for LKR 100,000.00 for the validity period of 119 days (up to 08.03.2023) the Bidder or one of his representatives is permitted to be present at the opening of the bids.

08. The Director Teaching Hospital. Jaffna reserves the right to reject any or all Bids and the right to accept any portion of a bid, at any time prior to awarding of a contract without giving any reasons for such .Clients not bound to accept the lowest or any bids.

09. Interested eligible bidders may obtain further information from Hospital Secretary at Teaching Hospital- Jaffna, on working days between 9:00 a.m. and 2:30 p.m.

10. Pre-bid meeting will be held at 10.00 am on 2022-Nov-04 at Directors offices, Teaching Hospital Jaffna.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**2022-Oct-25**



3ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 19 . 09 . 1981

இறப்பு 30 . 10 . 2019

பிரதீப் தர்சினி

திதி: திருதியை (28.10.2022)

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
உற்றவனும் பெற்றவர்களும்
உடன் பிறந்தவர்களும்
கூடிக் கழித்த உறவுகளையும் - விட்டு
பிரிந்து சென்றதேனோ
ஆண்டுகள் மூன்று ஆனதம்மா
நம்ப முடியவில்லை எம்மால்
நின் உறவின் அடிதேடி
துடிக்கின்றோம் தினம் தினம்
மீண்டும் எம்முடன்
இணைந்திட வருவாயோ

நாகநாதன் வீதி,
கொடிகாமம்.

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நலிவடைந்தவர்களுக்காக...

குறித்த விடயம் தொடர்பில், முழுநாள் விவாதம் ஒன்றை நடத்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் முன்வைத்த கோரிக்கை நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் தலைமையில் கூடிய கட்சித் தலைவர்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்தே நவம்பர் 8ஆம் திகதி இது தொடர்பில் முழுநாள் விவாதம் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்ததாவது:-

'பெருந்தோட்டத்துறை 51 வீதம், நகரத் துறை 43 வீதம், கிராமியத்துறை 34 வீதம் என்ற ஐ.நா. நிறுவனங்களின் கணக்கெடுப்பின்படி, கடந்த வாரம், இந்த நாட்டின் மிக மோசமான நெருக்கடியை சந்தித்துள்ள பெருந்தோட்டத் துறை மக்களின் வாழ்வாதார விவகாரங்கள் தொடர்பில், ஒத்திவைப்புவேளை பிரேரணை ஒன்றை நான் கொண்டு வந்து விவாதத்துக்கு உள்ளாக்கி இருந்தேன்.

நாட்டில் வாழும் அனைத்து நலிந்த பிரிவினர்கள் தொடர்பில் கூட்டாகப் பிரேரணை கொண்டு வந்து முழுநாளும் விவாதிப்போம் என்ற திட்டத்தை ஜே.வி.பி.யின் தலைவர் நண்பர் அநுரகுமார திஸாநாயக்கவும், நானும் அதன்பின் பேசி முடிவு செய்தோம்.

இதன்படி இன்று (நேற்று) அநுரகுமார திஸாநாயக்க அதுபற்றி கருத்திட, அதை நான் ஆதரிக்க கட்சித் தலைவர்கள் தற்போது எமது கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளனர். கணக்கெடுப்புக்களின் படி மிக அதிகமாகத் துன்புறும் நலிந்த பிரிவு குடும்பங்கள் தொடர்பாக முழுத் தேசமும், உலகமும் அறிந்துகொள்ளும் வண்ணம் எமது பிரேரணை அமையும்.

பெருந்தோட்ட உழைக்கும் குடும்பங்கள், நாளாந்த வருமான நகர பாமர குடும்பங்கள், மீனவ குடும்பங்கள், விவசாயக் குடும்பங்கள், ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர் குடும்பங்கள், மத்திய கிழக்கு உழைப்பாளர் குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவினர் தொடர்பில் நாம் விவாதிக்கவுள்ளோம்.

இந்தப் பிரிவினருக்கு விசேட ஒதுக்கீடு அடிப்படைகளில் நிவாரணங்கள் வழங்க வேண்டும் என்பதும், சமுர்த்தி வாழ்வாதார உதவி பெறுகின்றவர்களின் பட்டியல் அரசியல் தலையீடுகளினால், பாகுபாடு மிக்கதாக அமைத்துள்ளது என்றும், ஆகவே அந்தப் பட்டியல் உண்மையிலேயே நலிந்த பிரிவினரை உள்வாங்கும் முகமாக திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றும் நான் கோர விரும்புகின்றேன்' - என்றார். (அ-ம-22)

## பெண்ணிடம்...

தனிமையில் வசித்துவந்த குறித்த பெண்ணின் வீட்டுக்குச் சென்ற சந்தேகநபர், பெண்ணை அச்சுறுத்தி கழுத்தை நெரித்துச் சித்திரவதை செய்து ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலி மற்றும் அரைப் பவுண் மோதிரம் என்பவற்றைக் கொள்ளையிட்டார் என்று தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. எனினும், முறைப்பாடு வழங்கப்பட்டு ஒரு மாதமாகியும் சந்தேகநபர் கைது செய்யப்படவில்லை. இந்த நிலையில் இது தொடர்பில் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்துகிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் குறித்த சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் தெல்லிப்பழையில் வசித்து வருகின்றார் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-27)

## பல்வேறு...

அவர் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னுக்கு அடிமையானவர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக அலைபேசிகள், துவிச்சக்கரவண்டிகள் உள்ளிட்ட பல பொருள்கள் திருடப்பட்டமை தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான சந்தேகநபர் 28 வயதுடையவர் என்றும், சங்கானைப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

## மாணவி...

போயிருந்தார். இது தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் மாணவியின் பெற்றோரால் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் குறித்த மாணவி சில தினங்களின் பின்னர் மீண்டும் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். அவர் எங்கு சென்றார்? என்ன நடந்தது? என்பது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையிலேயே குறித்த மாணவி தனது சகோதரியின் கணவனால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது. இதையடுத்து சந்தேகநபர் பொலிஸாரால் தேடப்பட்ட நிலையில் அவர் சட்டத்தரணி ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையானார். இதையடுத்தே சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-56)

## கடலட்டைப்....

கிராஞ்சி - இலவன்குடாவில் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையிலும், பாரம்பரிய முறையிலான கடற்றொழிலை மேற்கொள்ள முடியாத வகையிலும் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அந்தச் சட்டவிரோதப் பண்ணைகளை அகற்றி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழியேற்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தி ஒரு மாதமாக பொதுமக்களும் கடற்றொழிலாளர்களும் இணைந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இது தொடர்பில் அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறையிட்டனர். இதனால் இந்த விவகாரம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போதே அடுத்த ஒரு வாரத்துக்குள் மேற்படி கடலட்டைப் பண்ணைகள் சட்டவிரோதமானவை என்றும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-213)

## படையினரிடம்...

சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது;-

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த அலுவலகம் போதியளவு செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கின்றோம். சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்பதையும் நிராகரிக்கிறோம். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டமைக்கு ஆதாரங்கள் எவையும் இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டனர் அல்லது அவர்களுக்கு எதிரான குழுக்களால் கடத்தப்பட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த விசாரணையில் காணாமல் ஆக்கப்பட்டோர் என்று அறிவிக்கப்பட்டவர்களில் 50 பேர் வெளிநாடுகளில் வசிப்பது தெரியவந்துள்ளது. இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர் என்பதையும் நிராகரிக்கின்றோம். இராணுவத்தினர் 60 ஆயிரம் பொதுமக்களை மீட்டனர் - என்றார். (அ-ம)

## பல்கலை...

ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப் பொருள்களுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

குறித்த மாணவர்கள் மூவரில் ஒருவர் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர் எனவும் மற்றைய இருவரும் நல்லூரைச் சேர்ந்த சகோதரர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த மாணவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவைக்கு அண்மையில் உள்ள கலட்டிச் சந்திக்கு அருகில் மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக, யாழ்.மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே மேற்படி கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மாணவர்களுக்கு ஹெரோய்ன் வழங்கிய குற்றச்சாட்டில் ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ம-26)

## வன்முறைக்குழு...

கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து சுன்னாகம் பொலிஸாரால் மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தீபாவளிதினமன்று உறவினர் வீட்டுக்குச் சென்று வீதியால் வந்த 17 வயதுச் சிறுவனை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் வாள்களால் வெட்டி காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றனர். காயமடைந்த சிறுவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டிலேயே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ம-125-17-26)

## இலங்கை...

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நேற்றுச் சந்தித்து முக்கியமான கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இந்தச் சந்திப்பு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்றது. இதன்போதே சம்பந்தன் தரப்பால் மேற்படி சுட்டிக்காட்டப்பட்டது.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் தேர்தல்கள் தொடர்பில் கடந்த காலங்களில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை. இப்போதும் நீங்கள் வந்தவுடன் வாக்குறுதிகளை இலங்கை அரசு அள்ளிவீசும். அந்த வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து விடாதீர்கள். கடந்த காலத்தில் இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக இறுக்கமான தீர்மானங்களை எடுங்கள்' என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

இதேவேளை - நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, பயங்கரவாதத் தடைச் சட்டம், நல்லிணக்கம், அதிகாரப் பகிர்வு, அரசமைப்புச் சீர்திருத்தம் மற்றும் வடக்கு - கிழக்கு காணி விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசினோம் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் தெரிவித்தனர். (அ-ம-22)

## 33 பவுண்...

வீட்டிலுள்ளவர்கள் தமது தொழில் நிமித்தமாக வெளியே சென்ற சந்தர்ப்பத்தை வாய்ப்பாகப் பயன்படுத்திய திருடர்கள் இந்தத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர். வீட்டின் உரிமையாளர்கள் மீண்டும் வந்து பார்த்தபோது நகைகள் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. இதையடுத்து இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26)

## இளைஞரொருவர்...

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சீனித்தம்பி சுதர்சன் (வயது -32) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டவர். குறித்த நபர் மன்னார் மாவட்டத்தில் அரச அலுவலராகப் பணியாற்றி வருகின்றார். சடலம் மீட்புத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## வரவு...

இதற்கமைய ஜனாதிபதியும், நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நவம்பர் 14ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு பாதீட்டை இரண்டாவது மதிப்பீட்டுக்காக சமர்ப்பித்து உரையாற்றுவார்.

ஒதுக்கீட்டுச் சட்டவரைவின் இரண்டாவது மதிப்பீட்டு மீதான விவாதம் நவம்பர் 15ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதுடன், இதன் மீதான வாக்கெடுப்பை நவம்பர் 22ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டவரைவின் குழுநிலை மீதான விவாதம் நவம்பர் 23ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதுடன், டிசம்பர் 8ஆம் திகதி மாலை 5 மணிக்கு மூன்றாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பை நடத்த இணக்கம் காணப்பட்டது. இதற்கமைய நவம்பர் 14ஆம் திகதி முதல் டிசம்பர் 8ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஞாயிறு மற்றும் போயா தினங்கள் தவிர கிழமையின் ஏனைய நாள்களில் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்கள் வெளியீடு

யாழ், ஒக். 28

கவிஞர் உடுவிலூர் கலா எழுதிய "மர பின் விழுதுகள்" மற்றும் "என் சுவாசக் காற்று" ஆகிய நூல்களின் வெளியீடு, சுன்னாகம் பொது நூலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நூலின் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் எஸ்.சிவலிங்கராஜா ஆற்றவுள்ளார். (ஒ-14)



அமெரிக்க லொத்தர் இலவச விசா

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

Passport அவசியமில்லை

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

V2 Travels

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

0768226244

## விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு கயட்டைப்புலம் வீதியில் நிலப்பரப்பு முறையே 10, 4 இரண்டு காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 843 5502
074 373 9982

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில்**
**12 ½ பரப்புக் காணி விற்பனைக்கு**

✓ ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி) யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
✓ 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
✓ யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 ½ KM தூரம்
✓ பார்வையிடும் நேரம்: காலை 08.00 - மாலை 5.30
✓ ஒரு பரப்பின் விலை : 6 இலட்சம் ரூபா

தொடர்பு: 077 874 8135
077 408 2649

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்புக் காணி விற்பனைக்கு**

- மூன்று பரப்பாகவும் நான்கு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- 18 பாதையுடன். நன்னீர் ஊற்று நிலம். நல்ல சூழல்
- 775 வழி பேரூந்துகள் செல்லும் காபற் வீதி
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி அருகாமையில்
- புத்தூர் சந்தியில் இருந்து 1½ Km தூரம் (சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து)
- 1 பரப்பின் விலை 2 லட்சம்

தொடர்புகளுக்கு: 076-7558606
074-3187263

## தேவை

வேப்பம் விதை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் எடுக்கப்படும்.

0779974311

## தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு

ஆச்சிதோட்டம் "அ" பகுதி தேவிபுரம் புதுகுடியிருப்பில் விற்பனைக்குண்டு. விலை 150 /- தேவை ஏற்படின் வாகன ஒழுங்கு செய்து தரப்படும்.

077 230 6344

## துயர் பகிர்கின்றோம்



புதிய உயர் கல்லூரியின் இயக்குநரும்
இந்து நாகரிக பாட பிரபல விரிவுரையாளருமான
**அமரர் சண்முகநாதன் அருள்நங்கை**
அவர்களின் இறப்புச் செய்தி கேட்டு நாமும்
துயரடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

கல்விச் சமூகம்
பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்-சுன்னாகம்
BARATHY - சித்தன்கேணி

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு.**

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்:-**

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்
077 986 5457
077 814 7389

# மரண அறிவித்தல்

ஆரியகுளம் யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரி நிர்வாக இயக்குனரும்,
பிரபல இந்து நாகரீக விரிவுரையாளரும்

## திருமதி அருள்நங்கை சண்முகநாதன்



ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தை பிறப்பிடமாகவும் கட்டைப்பாலி லேன் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள் நேற்று (27.10.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் சண்முகநாதன் (புதிய உயர் கல்லூரி இயக்குனர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சந்துதன், தேவசந்துதன், தேவசாத்விகன் (ஏஞ்சல் சர்வதேச பாடசாலை) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் விஜயலக்ஷ்மி தம்பதியரின் மகளும், ஏழாலை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மாணிக்கம் அன்னம்மா தம்பதியரின் மருமகளும், பாலபாஸ்கரன் (புதிய உயர் கல்லூரி முகாமைத்துவப் பணியாளர்), காலஞ்சென்ற அருள்வேல் மற்றும் கமலாம்பிகை (பிரான்ஸ்), இராஜநங்கை (ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), காலஞ்சென்ற செந்தில்குமாரன் ஆகியோரின் மூத்த சகோதரியும், இராகினி, செல்வரஞ்சன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் மைத்துனியும், பாலகார்த்திகா (U.K), பாலமயூரா (ஆசிரியர், யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), பாலரஜீவன் (U.K) ஆகியோரின் மாமியும், சர்மிளா (பிரான்ஸ்), ஜெயந்தன் (பிரான்ஸ்), சிந்துஜன் (NDB வங்கி), விதுஷன் (திறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பெரிய தாயாரும், சிவகேதீசன் (U.K), ஜெயதீபன் (செலிங்கோ காப்புறுதிக் கம்பனி - சாவகச்சேரி), மதுசா (U.K) ஆகியோரின் பெரிய தாயாரும், காலஞ்சென்ற சிவமணி (சிங்கள ஆசிரியர்), இராமச்சந்திரன் காலஞ்சென்ற இரத்தினசிங்கம், திலகமணி, செல்வராசா (பணியாளர்-புதிய உயர் கல்லூரி), பத்மநாதன் (நிர்வாக இயக்குனர் பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம், சுன்னாகம், BARATHY சித்தங்கேணி), மோகனா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், காலஞ்சென்ற நவமணி, நவமணிதேவி, ஞானக்கொழுந்து (ஓய்வு பெற்ற ரெலிக்கொம், பணியாளர்), சகிலா (ஓய்வுபெற்ற கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனியும், பகீரதன் (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) மாதங்கி, தர்ஷன் (கணக்காளர் - கொழும்பு) ஆகியோரின் மாமியும், தவசீலன் (மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்), ஜெயகாந்தன் (புதிய உயர் கல்லூரி பணியாளர்), தவரஞ்சன் (S.S.Tourist in, யாழ்ப்பபாணம்), ஷோபனா (QA Engineer பம்பலப்பிட்டி), தர்மிகா (Canada), ஆர்த்திகா, அபிராம் (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), தரணீசன் (யாழ் இந்துக் கல்லூரி) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரது புதிய இல்லத்தில் வைக்கப்பட்டு 30.10.2022 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் கிரியைகள் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக மு.ப 11.30 மணியளவில் காக்கைதீவு கரையான்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31.07.1951 | 27.10.2022 |

சண்முகநாதம், கட்டைப்பாலி லேன்,
ஆனைக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்
021 225 5607



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.